# உடனடியாக பூரண சுதந்திரத்திற்காக

# ஆரம்பம்

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் வெளியீடு — இல: 3, 22வது ஒழுங்கை கொழும்பு 3.
பிரசித்த செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மலர்: 3 | பெப்ரவரி 1977 | விலை 30 சதம் | இதழ்: 1

## முதலாளித்துவ விரோத

# ஐக்கிய முன்னணியை அமைக்க

# அழைப்பு

பூரண சுதந்திரத்திற்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடுவதற்கு ஆயத்தமான முதலாளித்துவ விரோத ஐக்கிய முன்னணியொன்றை அமைப்பதற்கு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும், புரட்சிகர மார்க்ஸீயக் கட்சியும் அழைப்பு விடுக்கிறது இன, குல, மத, மொழி, பாலியல், பிரஜைகள் என்ற பேதமற தொழிலாள வர்க்கத்தினதும். உழைப்போரும் ஒடுக்கப்பட்டோருமான மக்கள் பகுதியினரதும் நலன்களை வலியுறுத்தும் முகமாக இந்த முன்னணி முதலாளித்துவ வர்க்கத்திற்கும் முதலாளித்துவ அரசுக்கும் எதிராகப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும். ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் காங்கிரஸ் உட்பட்ட சகல வலதுசாரிச் சக்திகளுக்கும் எதிராக போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்.

இந்த அழைப்பை தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களுக்கு விளக்குவதற்காகவும் அவசரகால நிலைமை கிட்டத்தட்ட ஆறுவருட காலத்திற்குப்பின் ஒழிந்தமையைக் குறிக்கவும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தினதும், புரட்சிகர மார்க்ஸீயக் கட்சியினதும் ஆதரவில் மார்ச் 9ந் திகதி புதன்கிழமை கொழும்பு ஹைட்பார்க்கில் பகிரங்கக் கூட்டமொன்று நடைபெறும். இக் கூட்டத்திற்கு வேலை நிறுத்தம் செய்து ஊர்வலமாகச் சென்று பங்கு கொள்ளவேண்டுமென இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் சபை தீர்மானித்துள்ளது.

1977 பெப்ரவரி 25ந் திகதி இலங்கை வர்த்தக ஊழியர்சங்கத்தினால் இந்த அழைப்பு சம்பந்தமாக ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின் முழு வாசகமும் பின்வருமாறு:

''இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும், புரட்சிகர மார்க்ஸீயக் கட்சியும் இன, குல, மொழி, மத, பாலியல் பிரஜை என்ற பேதமற வெகு ஜனங்களின் பூரண சுதந்திரத்திற்காகவும், மக்களின் சகல பகுதியினருக்கும் பூரண சமத்துவத்திற்காகவும் போராட விரும்பும் தொழிலாள வர்க்கத்துடன் ஏனைய ஸ்தாபனங்களையும் கொண்ட முதலாளித்துவ விரோத ஐக்கிய முன்னணியொன்றை அமைப்பதற்காக அழைப்பு விடுக்கிறது. தொழிலாள வர்க்கத்தினதும், உழைப்போரும் ஒடுக்கப்பட்டோருமான மக்கள் பகுதியினரதும் நலன்களை வலியுறுத்தும் முகமாக, இந்த முன்னணி முதலாளித்துவ வர்க்கத்திற்கும், முதலாளித்துவ அரசுக்கும், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் காங்கிரஸ் ஆகியவைகள் உட்பட்ட சகல வலதுசாரிச் சக்திகளுக்கும் எதிராக போராட்டத்தை முன்னெடுத்துச் செலவதற்காகவாகும். இலங்கையில் முதலாளித்துவ ஆட்சியைக் கவிழ்த்து தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கமொன்றை ஏற்படுத்தி, அனைத்துலக தொழிலாளர்களுடன் இணைந்து இலங்கையை சோஷலிஸப் பாதையில் இடுவதற்கே இந்த முன்னணியின் எதிர்கால நோக்கமாகும்.

''இந்த ஐக்கிய முன்னணியின் நோக்கங்களை வலியுறுத்துவதற்காக தொழிலாள வர்க்கத்தையும் அதனோடு இணைந்த சக்திகளையும் ஐக்கியப்படுத்தி அணிதிரட்டும் செயலானது இனிமேல் இணங்கவுள்ளதோர் அரசியல் மேடைக் கோரிக்கைகளின் அடிப்படையிலேயே அமையவேண்டுமென எமது ஸ்தாபனம் கருதுகிறது.''

தேர்தலுக்கு முன் மக்களினால் வென்றெடுக்கக் கூடியதும் அவ்வாறே இப்பொழுது மிக நெருக்கமாக எழுந்துள்ள கோரிக்கைகள் பற்றி விசேடமான உடனடிக்கவனம்செலுத்துவதற்கு பொதுச் சபை தீர்மானித்தது. அதன் பிரகாரம் உடனடியாக வென்றெடுக்கக் கூடிய கோரிக்கைகளாக முன்வைக்கப்படுபவைகள் இவையாகும்.

- சகல அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்தல்.
- அத்தியாவசிய சேவைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வேலையைக் கைவிட்டதாக கருதி அந்தக் காரணத்திற்காக வேலை மறுக்கப்பட்ட சகல தொழிலாளர்களையும், நஸ்ட நிவாரணத்துடன் மீண்டும் வேலைக்கமர்த்துதலும், அவசரகால நிலைமையின் கீழ் தொழிலாளர்மீது தண்டனையாகத் திணிக்கப்பட்ட மாற்றம் அல்லது வேறு தண்டனைகள் சகலதையும் இரத்துச் செய்தல்.
- பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தையும், குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டத்தையும் மற்றும் பொலீஸ் ஆயுதப்படையினர் உட்பட்ட பொதுத்துறையைச் சேர்ந்த ஊழியர்கள் மீது அரசியல் மற்றும் தொழிற்சங்க உரிமைகளுக்கு விதிக்கப்பட்ட சகல சட்டமூலமான தடைகளையும் இரத்துச் செய்தல்.
- பொதுத்துறையிலும் தனியார் துறையிலுமுள்ள சகல தரத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வு ஒவ்வொன்றுக்கும் வாழ்க்கைச் செலவுப் படியாக ரூபா 2-50 வழங்கல்
- அறுபது வயதிற்குட்பட்ட வர்களைக் கட்டாய ஓய்வு பெறச் செய்யாமலும் வயது காரணமாக எந்த அரச அல்லது தனியார் ஸ்தாபனத்திலாவது 60 வயது வரை தொடர்ந்து தொழிலைச் செய்யவிடாமல் அல்லது கட்டாய ஓய்வுபெறச் செய்த சகல ஊழியர்களையும் நஷ்ட நிவாரணத்துடன் மீண்டும் வேலைக்கமர்த்தல்.
- நேரடியாகவோ அல்லது தனிப்பட்ட பொருத்தக் காரர் மூலமாகவோ அல்லது தொழிலாளர் கூட்டுறவு ... தொழிற்சங்கங்கள் மூலமாகவோ வழமையான வேலைக்கு சமயா சமய அல்லது தற்காலிக அடிப்படையில் எந்த ஸ்தாபனத்திலாவது வேலைக்கமர்த்தப்பட்ட சகல தொழிலாளர்களையும் வழமையான தொழிலாளர்களுக்குரிய சகல உரிமைகளுடனும் வேலையில் உறுதிப்படுத்தலும் வருங்காலத்தில் வழமையான வேலைக்கு எந்த ஸ்தாபனத்திலாவது அத்தகைய அடிப்படையில் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுதலைத் தடை செய்தலும்.
- சட்டத்தின் மூலம் 5 நாள் 40 மணி நேர வாரத்தை ஏற்படுத்துவதுடன் மேலதிக நேர வேலை அடிப்படையில் தொழிலாளியின் சம்மதத்துடன் செய்யும் வேலை தவிர்ந்த மேலதிக வேலை எதையும் தடை செய்தல்.
- அங்கீகரிக்கப்பட்டவை என்று கூறப்பட்ட அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் கட்டுப்பண விடயத்திலோ அல்லது வேறு எந்த வகையிலோ விசேட சலுகைகள் வழங்காது, அரசியல் கட்சிகளாகவோ அல்லது தொழிற்சங்கங்களாகவோ அல்லது வேறுவகையானவையாகவோ இருப்பினும் அவைகள் சமத்துவமான முறையிலும், சமவசதிகளுடனும் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு சகல ஸ்தாபனங்களுக்கும் வசதி அளிக்கும் பொருட்டு பொருட்டு பொதுத்தேர்தலுக்கு முன் தேர்தல் சட்டத்தை திருத்துதல்.

## கற்றங்தொல தொழிலாளர்கட்கு மீண்டும் வேலை

ஜனவாச அமைப்பை சீர்குலைக்க செய்யும் நோக்குடன், பிற்போக்குத் தொழிற்சங்கமொன்றை அமைக்கும் எண்ணத்தைப் பரப்பி, ஜனவாச அமைப்பிலுள்ள தொழிலாளர்களைத் தவருக வழிநடத்தி, ஜனவாச அமைப்புக்கு மாருகவும், முறையற்ற முறையிலும் நடந்து கொண்டார்களென்ற குற்றச் சாட்டின் மீது கற்றந்தொல தோட்டத்தில் மேலதிக பிரதான பணிப்பாளர், செல்வி சந்திரிகா பண்டாரநாயகவின் பணிப்புரைகளின்பேரில் 1976 ஆகஸ்ட் 19ந் திகதி முதல் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆறு தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

தோழர்கள் எல். கருணனந்த சிவனுண்டி, சண்முகராஜா, பி. கே. பிரேமசிறி, டபிள்யூ. ஜினதாச மற்றும் ஹன்டி சிங்கோ ஆகியோரே தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டோராவர்.

கற்றந்தொல தோட்டத்தைச்சேர்ந்த தொழிலாளர்கள் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் சேர்ந்து கொண்டிருக்கையிலே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

கற்றந்தொலதோட்டத்தின் திட்ட முகாமையாளருக்குச் சங்கம் எழுதிய கடிதத்தில்பின் வருமாறு கூறப்பட்டிருந்தது.

''கூறப்பட்டுள்ள காரணத்திற்காகத் தொழிலார்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கும் நடவடிக்கையானது சங்கத்தை நேரடியாகத் தாக்கும் செயல் மட்டுமன்றி, தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டோருக்கும் அத்தோட்டத்தைச் சேர்ந்த ஏனைய தொழிலாளர்கட்கும் தமது சொந்த விருப்பத்திற்கிணங்கத் தொழிற்சங்கமொன்றில் சேரும் சட்ட பூர்வமான அடிப்படை ஜனநாயக உரிமையையும் நேரடியாக தாக்கும் செயலாக அமையுமாகையால் அந்த நடவடிக்கைக்கு எதிராக எமது பலத்த ஆட்சேபனையைத் தெரிவிக்கின்ருேம். எமது சங்கம் பிற்போக்குச் சங்கம் என்ற கூற்றையும் நாம் நிராகரிக்கின்ருேம்.''

கற்றந்தொல தோட்டத் தொழிலாளர்களும் கூட்டாக திட்ட முகாமையாளருக்கு எழுதிய கடிதத்தில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த ஆறு தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக்கமர்த்த வேண்டும் எனக் கேட்டிருந்தனர். அவர்கள் இவ்வாறு கூறியிருந்தனர்:

''தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆறு தொழிலாளர்களுக்கும் தங்களைப் போன்று தாம் விரும்பிய சங்கத்தில் சேருவதற்கு சட்டபூர்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் தமிழ்-சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும்

''தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளை தனித் தமிழ் நாடொன்றில் பெறலாம் என்று நினைப்பது பிரமையாகும். தெற்கே தமிழர்களுக்குச் சமானமான சிங்களவர்கள் சிங்கள மக்களை தயக்கமின்றியும், ஈவிரக்கமற்றும் சுரண்டி அடக்கு முறையின் கீழ் வைத்திருப்பதைப்போல் தமிழ் மக்களையும் தயக்கமின்றியும், ஈவிரக்கமற்றும் சுரண்டி, அடக்கு முறையின் கீழ் வைக்கும் தமிழர்களும் உண்டு.''

இவ்வாறு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் டிசம்பர் 10ந் திகதி மண்டபம் நிறைய மிகுந்த கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் தோழர் பாலா கூறினார். ''மனித உரிமைகள்'' பற்றிய இக்கூட்டம் கொழும்பு ஆய்வுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக்கூட்டத்தில் வேறு பலரும் உரையாற்றினர்.

தோழர் பாலா தனது பேச்சில் மனித உரிமைகள் என்ற விடயம் சிங்களம் பேசுவோருக்கும் தமிழ் பேசுவோருக்கும் பொதுவானதென்று கூறினார். இலங்கையில் ஸ்தாபன ரீதியாக சித்திரவதை நடைபெறுவதன் மூலம் சிங்களவர்களும் தமிழர்களும் சரீர ரீதியாகவும், மனோரீதியாகவும் வேதனைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர் என்று அவர் முதலில் கூறினார். தொடர்ந்து அவர் உரையாற்கையில் கூறியதாவது.

''குற்றவியல் நீதி ஆணைக் குழுச் சட்டத்தின் கீழ் ''எச்சூழ்நிலையிலும்'' பெறப்பட்ட வாக்குமூலங்கள் உண்மையாயிருக்குமென்று ஏற்றுக் கொள்வதற்கு விசேட வசதியளிக்கப் பட்டுள்ளது. பாரளுமன்ற எதிர்க்கட்சியிலுள்ள எந்தவொரு கட்சியும் இச்சட்டத்தை இரத்துச்செய்யவோ அல்லது அச் சட்டத்தின்கீழ்குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களை விடுதலை செய்யவோ கோரவில்லை, சிறைகளில் தமிழ் இளைஞர்கள் மட்டும் துன்பப்படவில்லை. சிங்கள இளைஞர்களும் அவ்வாறே துன்பத்திற்காளாகியுள்ளனர். இச்சட்டத்தை இயற்றுவதற்கு உதவிபுரிந்த கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா இப்போது அவர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டுமென்கின்றார். ஐக்கிய தேசியக்கட்சி விஜேவீராவை சிறையில் வைத்திருப்பதை ஆதரிக்கிறது. தமிழரசுக் கட்சிக்கோ அரசியல் கைதிகள் விடயத்தில் பொதுவாக எந்த ஒரு நிலையும் கிடையாது. ஆனால் நாம் சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற முறையில் விடுதலை செய்ய வேண்டும் என்ற நிலையை எடுத்துள்ளோம்.

''இப்பொழுது உயர் நீதிமன்றம் அவசரகால நிலைமை செல்லுபடியாகுமென்று தீர்ப்பளித்துள்ளது. அரசியலுக்கு உகந்த காரணங்களுக்காக, அரசாங்கம் அவசரகால நிலையைத் தளர்த்துவதாகவும் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் மீது வழக்குத் தொடருவதில்லையென்றும் அறிவித்துள்ளது. ஆனால் சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய அது விரும்பவில்லை.

''ஜனதா விமுக்தி பெரமுனை 1970ம் ஆண்டுத் தேர்தலுக்குப் பின் நாட்டில் பிரமாண்டமான கூட்டங்களை நடத்தியது அக்கூட்டங்களுக்குப் பெருந்திரளான மக்கள் சென்றனர். அரசாங்கம் அந்த இயக்கத்தை ஒழித்துவிடும் நோக்குடன் அரசாங்க வர்த்தமானிமூலம் சட்டங்களை இயற்றுவதற்காக 1971 மார்ச் 16ந் திகதி அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்தது. பிரேதப் பரிசோதனையோ அல்லது மரணவிசாரணையோ இன்றிப் பிரேதங்களை அகற்றுவது தொடர்பாக மனிதர்களை குழுக்காக தாம் விரும்பியபடி அழித்தொழிக்க பொலீஸாருக்கு அதிகாரமளிக்கும் சட்ட விதியொன்று மார்ச் மாதம் 16ந் திகதி இரவு முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. 1971 மே முற்கூறில் பாராளுமன்றம் கூடியபோது ஜே.ஆர்.ஜயவர்தனவும், காலம் சென்ற டட்லி சேனநாயகவும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவைத் தெரிவித்தனர். இப்பொழுது மெதடிஸ்த திருச்சபை கூட அவசரகால நிலைமையை ஒழிக்கவேண்டுமென்று கோரினாலும் அது முதலில் அமுலாக்கப்பட்டதற்கான காரணங்களை அங்கீகரித்துள்ளது.

தோழர் பாலா தொடர்ந்து உரையாற்றும்போது நீதிபதி கிறிஸ்டோபர் அலெஸ் அவர்களால் ''1971 கிளர்ச்சி'' என்ற தலைப்பில் எழுதப்பட்ட புத்தகத்தைக் குறிப்பிட்டார். அது தொடர்பாக அவர் கூறியதாவது:

''திரு, ஆர். எல். மைக்கல் அவர்களால் பதிப்பிடப்பட்ட பத்திரிகை அப்புத்தகத்தை போற்றியுள்ளது. துரதிருஸ்டவசமாக நான் சொல்லப்போவதைச் செவிமடுப்பதற்கு பேச்சாளர் பட்டியலில் ஒருவராகக் காணப்படும் திரு மைக்கல் பிரசன்னமாயில்லை, நான் அப்புத்தகம் தொடர்பாக பிரதம நீதியரசருக்கு எழுதியுள்ளேன். பாராளுமன்றத்திலும் அதனைப்பற்றிக் கேள்வியெழுப்புவதற்கும் நடவடிக்கையெடுத்துள்ளேன். குற்றவியல் நீதி ஆணைக்குழுவில் பிரதம வழக்கில், வழக்குத் தொடரப்பட்டோர் குற்றவாளிகளாகக் காணப்பட்டதற்கான காரணங்கள் பகிரங்கப்படுத்தப் படாதிருப்பினும், நீதிபதிகளுள் ஒருவர் இந்த விசாரணையின்போது திரட்டப்பட்ட விபரங்களின் அடிப்படையிலேயே அப்புத்தகம் எழுதப் பட்டதாகக் கூறியுள்ளார்.

''அவிசாவளை உயர் நீதி மன்றத்தில் அண்மையில் முடிந்த வழக்கில் மருத்துவமனையில் வைத்துப் போலீஸ் சார்ஜன்டைக் கொலை செய்தார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்ட எதிரிகளை விடுதலை செய்த போது புத்தகத்தில் சித்தரிக்கப்பட்ட நிலைக்கு முற்றிலும் மாறானதொரு நிலை வெளிவந்தது. இந்நாட்டின் மக்கள், சிங்களவர்களாகவோ, தமிழர்களாகவோ அல்லது முஸ்லிம்களாகவோ இருந்தாலும் 1971 ஏப்ரல் சம்பவங்கள் தொடர்பான முழு உண்மைகளையும் என்றாவது ஓர் நாள் அறியக் கோருவார்கள். (பலத்த கரகோஷம்)

''ஒடுக்கலையும், பொலீஸ் பயங்கரவாதத்தையும் எதிர்க்கும் போராட்டம் நாம் தமிழர்களாகவோ அல்லது சிங்களவர்களாகவோ இருக்க நேர்ந்தாலும் அனைவருக்கும் பொதுவானதாகும். மக்களை அடக்குமுறை செய்வதற்கு சிங்கள சுரண்டல்வாதிகளுடன் ஒத்துழைக்கும் தமிழ் சுரண்டல்வாதிகள் இருக்கின்றார்கள். இங்கிருப்போரில் எவராவது தமிழ் மக்களின் ஒடுக்குதலுக்கு தனித் தமிழ்நாடு முற்றுப்புள்ளி வைக்குமென எண்ணினால் அது வெறும் பிரமை தவிர வேறொன்றுமில்லை, ஏனெனில் தமிழ் ஆளும் வர்க்கத்தில் அவர்களுக்குச் சமானமான சிங்களவர்கள் செய்வதைப்போல் தயக்கமின்றி தமது சொந்த இனத்தவரை அடக்குமுறை செய்யக் கூடியவர்களும் அவ்வாறே ஈவிரக்கமற்ற சுரண்டல்வாதிகளும் இருக்கின்றனர். எனவே உண்மையான பரிகாரம் தனி நாட்டுக்காகப் போராடுவதில் தங்கி இருக்கவில்லை. ஆனால் ஒடுக்கப்பட்ட ஏனைய பகுதியினருடன் சுரண்டலுக்கும், அடக்குமுறைக்கும் முற்றுப்புள்ளிவைக்க ஒன்றுபடுவதிலேயே அது தங்கயுள்ளது.

பேராதனை வளாகத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் மூலம் வெளிக்காட்டப்பட்ட பொலீஸ் பயங்கரவாதத்தை எதிர்த்தும், அவசரகால நிலைமையை ஒழிப்பதற்குக்கோரியும் 1976 நவம்பர் 26ந்திகதி நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி காட்டிய மனப்பான்மையை தோழர் பாலா குறிப்பிட்டார். தமிழர் விடுதலை கூட்டணிஅதன் தலைமைப்பீடத்தின் குறுகிய மனப்பான்மையினால் வேலை நிறுத்த நடவடிக்கையில் பங்கு கொள்ளாது ஒதுங்கிக் கொண்டதென்று கூறினார். அதே காரணத்திற்காக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் சில தமிழ் அங்கத்தவர்கள் அத்தினத்தில் வேலைக்குச் சென்றார்கள் என்றும் வேறு சிலர் சங்கத்திற்கு எழுதியுள்ளனர் என்றும் குறிப்பிட்டார். அவ்விடயம் பற்றி மேலும் அவர் கூறியதாவது.

''அவர்களின் பிரதானமுறைப்பாடு என்னவென்றால் தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது நடைபெற்ற சம்பவத்திற்கோ அல்லது யாழ்நகர் செம்மணியில் வங்கி லிகிதர் சுடப்பட்டதற்கோ அல்லது புத்தளத்தில் முஸ்லிம்கள் சுடப்பட்டதற்கோ அடையாள வேலை நிறுத்தம் செய்வதற்கு நாம் அழைக்கவில்லை என்பதுதான் ஆனால் பிரச்சனை இதுதான். சம்பந்தப்பட்டவர்கள் அல்லது சம்பவத்துடன் தொடர்புடைய ஸ்தாபனங்கள் ஒன்றுபட்ட அடையாள நடவடிக்கைக்கு அழைப்பு விடுப்பது அவசியமென்று கருதவோ அல்லது பேச்சுவார்த்தைகளைத் தாங்களாக ஏற்படுத்தவோ தவறிவிட்டன.

''மறுபுறத்தில்கினுகெலை தோட்டத்தில் இரண்டு தோட்டத் தொழிலாளர்கள் போலீசாரிசாரினால் கொல்லப்பட்டபோது இளைஞர் சோஷலிஸ முன்னணியின் அழைப்பின் பேரில்1970 நவம்பர் 13ந்திகதி மலைநாட்டில் நடைபெற்ற பிரமாண்டமான கண்டனக் கூட்டத்தில் இ. வ. ஊ. சங்கமும், ஜனதா விமுக்தி பெரமுனையும் பங்குகொண்டன. அக்கூட்டத்தில் இளஞ்செழியனும், விஜேவீரவும், நானும் ஒரே மேடையில் உரையாற்றினோம், விஜேவீர தமிழில் பேச முடியாமைக்கு வருத்தம் தெரிவித்தார். ஆனால் அவர் ஏற்கனவே தமிழ் பயின்றுகொண்டிருந்ததால் விரைவில் தமிழில் உரையாற்றுவதாக உறுதியளித்தார். ஆனால் அதன் பின்னர் மிகச் சொற்ப காலத்தில் அவர் சிறை வைக்கப்பட்டதால் அந்த உறுதியை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. பின்னர் குற்றவியல் நீதி ஆணைக்குழு முன் அவர் அளித்த வாய்மூல தொகுப்புரையின் முடிவில், தமிழில் நீதிக்கு என்றுமே வெற்றி! என்ற தமிழ் முதுமொழியைக் குறிப்பிட்டு உரையை முடித்தார்.

''தான் அப்படிச் செய்வது தன்னைவிட மிகவும் மோசமான நிலைமையின் கீழ் தமது உரிமைகளுக்காகப் போராடும் சிறுபான்மையினருடன் ஒற்றுமை தெரிவிப்பதற்காக என்று ஆணைக்குழுவுக்குக் கூறினார்.

''1971ன் ஏப்ரல் சம்பவங்களின் பின் ஏபரி பிரபுவுடனும், பிரின்ஸ் குணசேகரவுடனும் தெற்கே பிரயாணம் செய்த போது பெயர்ப் பலகைகளில் எந்த ஒரு தமிழ் எழுத்தும் அழிக்கப்படாதிருந்ததை

5ம் பக்கம் பார்க்க

# போனஸ் போராட்டத்தில் ஊழியரின் சேவை இடைநிறுத்தம்

## ரிச்சட் பீரிஸ் கம்பனியின் நியாயமற்ற நடவடிக்கை

கடந்த டிசம்பர் 16ந் திகதி இரவு ஏழு மணியளவில் நாவின்னையிலுள்ள ரிச்சர்ட் பீரிஸ் கம்பெனியின் வேலை ஸ்தானத்தில் பொலீசார் ரைபிள்கள் குண்டாந்தடிகள் சகிதம் தோன்றி தொழிலாளர்களைத் தாறுமாறாகத் தாக்கியதால் சிலர் காயம் அடைந்தனர்.

நிர்வாகத்தினால் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போனஸ் பணம் போதாதெனவும் அதனை அதிகரிக்க வேண்டுமெனவும் அங்குள்ள தொழிற் சங்கத் தலைவர்கள் நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சித்தாலும் அது பற்றி ஒரு வார்த்தையாவது பேசுவதற்கு நிர்வாகிகள் தயாரில்லையெனத் தெரிவித்ததால் ஊழியர்கள் வேலைத்தளத்தில் உள்ளிருப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே பொலீஸாரின் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

நிர்வாகிகளின் முரண்டுத்தனத்துக்கும், பிடிவாதத்திற்கும் எதிரான சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் கோஷங்களை எழுப்பி டிசம்பர் 15ந் திகதியிலிருந்து ஊழியர்கள் தமது எதிர்ப்பை அடிக்கடி காட்டி வந்துள்ளனர். டிசம்பர் 17ந் திகதி அடையாள வேலை நிறுத்தம் ஒன்றைச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருந்ததால் அதுவரைக்கும் வழமையான வேலையைச் செய்யுமாறு சங்கத் தலைவர்கள் தமது அங்கத்தவர்களுக்கு டிசம்பர் 16ந் திகதி ஆலோசனை கூறியிருந்தனர். இதற்கிடையே நிர்வாகப் பணிப்பாளர் ஒருவர் ஊழியர்களின் ஆத்திரத்தையும், கோபத்தையும் தூண்டும் வகையில் நடந்து கொண்டதால் அவருக்கு எதிராக ஊழியர்கள் கூச்சலிட்டு கேலி செய்ததன் விளைவாகவே இந்த பொலீஸ் தாக்குதல் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு வந்த பொலீஸார் ஊழியர்களை வேலைத்தளத்திலிருந்து வெளியே விரட்டிவிட்டு வாசல் கதவுகளையும் மூடியதோடு சுற்றுடலில் பஸ்களில் பிரயாணம் செய்வதற்காக பஸ் தரிப்புகளில் காத்து நின்ற பொது மக்கள் மீதும் தமது கைவரிசையைக் காட்டினார்களாம்.

இத்தாக்குதலின் பின்னர் கம்பனி நிர்வாகம் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் அங்கத்தினர்களான 21 ஊழியர்களினதும் ஏனைய சங்கங்களின் அங்கத்தவர்களான மேலும் சில ஊழியர்களினதும் சேவையை இடை நிறுத்தி வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்பிட்டி வழக்கில் விடுதலை

**1971 ஏப்ரல் 7ந் திகதி காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாரென்று சொல்லப்படும் என். டி. மென்டிஸ் என்ற பொலீஸ் சார்ஜன்டை, எல்பிட்டி மருத்துவமனையில் வைத்து சுட்டுக் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த எச். எட்மன்ட், கே. சோமபாலா ஆகிய இரு இளைஞர்களும் அவிசாவளை உயர்நீதி மன்றத்தில் ஒரு மாதத்திற்கு மேலாக நடைபெற்ற வழக்கு விசாரணைக்குப்பின் ஜுரர்களின் ஏகமனதான தீர்மானத்திற்கிணங்க கடந்த நவம்பர் 25ந் திகதி நள்ளிரவில் விடுதலை செய்யப்பட்டார்கள்**

இது சர்வ சாதாரணமானதொரு குற்றச்சாட்டல்ல. எதிரிகள் இருவரும் ஜனதா விமுக்தி பெரமுனையின் உறுப்பினர்களெனவும், அவர்களுடைய அரசியல் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகவே அவர்கள் இக் கொலையைச் செய்தார்கள் என்று நிரூபிக்கப் பிரயத்தனம் செய்யப்பட்டது. அதனாலேயே இவ்விரு சந்தேக நபர்களும் ஐந்து வருடங்களுக்கு மேலான காலத்திற்கு புனருத்தாரணமென்று கூறப்பட்ட முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் காலம் கழித்தனர். மேலும் 1971 ஏப்ரல் மாதத்திலும், அதற்குப் பின்னரும், ஜனதா விமுக்தி பெரமுனைக்கு எதிராகச் சாதாரண மக்கள் மத்தியிலும், விசேடமாக பொலீஸ்படையினர் மத்தியிலும் கோபத்தையும் குரோதத்தையும் கிளப்பி விடும்பொருட்டு, ''எல்பிட்டி பொலீஸ் சார்ஜன்ட் பயங்கரவாதிகளால் மருத்துவமனையில் வைத்துக் கொலைசெய்யப்பட்டார்,'' என்று இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியறிக்கையிலும் அரசின் ஆதிக்கத்திலுள்ள செய்திப் பத்திரிகைகளிலும் மீண்டும் மீண்டும் பிரசாரம் செய்யப்பட்டன.

## மனிதப் படுகொலைகள்

இவ்வகையான பிரசாரங்களால் ஏமாற்றப்பட்ட பொலீஸ் படையினர்கள் ''பயங்கரவாதிகள்'' என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களையும், யுவதிகளையும் எந்த முறையில் நடத்தியிருப்பார்கள் என்பதைச் சிந்திப்பதில் நமக்கு அதிக சிரமமிருக்காது. ஆயிரக்கணக்கான இளைஞர்களையும், யுவதிகளையும் பச்சை பச்சையாகக் கொலை செய்யயும், பல்வேறு முறைகளில் சித்திரவதைகள் செய்யவும் ஏதுவாக இருந்த இப் பிரசாரங்கள் நம்பத்தகாதவைகள் என்று இவ்வழக்கில் அரசாங்க தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளன.

நவம்பர் 30ந் திகதி பாராளுமன்ற உறுப்பினர் (ஹபராதுவ) பிரின்ஸ் குணசேகர அவர்கள் தேசிய அரச பேரவையில் பேசும்போது, இவ்வழக்கு குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் விசாரணை செய்யப்பட்டிருந்தால் இந்த எதிரிகளுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்படுவது நிச்சயம் என்று கூறினர். சாதாரண சட்டத்தின்கீழ் நடந்த சம்பவங்களின் உண்மை பொய்களை உணர்ந்து முடிவு செய்யக்கூடிய — தீர்மானிக்கக் கூடிய ஜுரர்கள் முன்னிலையிலேயே இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது.

## கிளர்ச்சி இல்லை

இவ்வழக்கில் அளிக்கப்பட்ட சில சாட்சியங்களிலிருந்து அம்பலமாகிய ஓர் முக்கிய விடயமென்னவெனில், ஏப்ரல் 5ந் திகதியும், 6ந் திகதியும் அரசின் அறிக்கைகளில் குறிப்பிட்டிருந்தபடி கிளர்ச்சியோ, ''பயங்கரவாத ஆக்கிரமிப்பு'' சம்பவங்களோ எல்பிட்டி பிரதேசத்தில் நடைபெறவில்லை என்பதுதான். பொலீஸ் கான்ஸ்டபிள் குமாரசிங்காவுடைய சாட்சியத்தின் படி ஏப்ரல் 5ம் திகதி இரவில் ஏதோ வெடிக்கும் சத்தம் அவருக்குக் கேட்டது என்றாலும் ஏப்ரல் 5ந் திகதி ''பயங்கரவாதிகள்'' பொலீஸைத் தாக்கவில்லை. பொலீஸ் பரிசோதகர் ஜினசேன அவர்களின் சாட்சியத்தின் படியும், ஏப்ரல் 5ந் திகதி பொலீஸையோ, பொலீஸ் படையினர்களையோ எவரும் தாக்கவில்லை. ஆறாந் திகதி காலையில் யாரோ ஒருவர் அவருடைய ஜீப் வண்டியைச் சுட்டுச் சேதப்படுத்தியதாகக் கூறினாரெனினும், அந்த வாகனத்துக்கு ஏற்பட்ட நஸ்டம் பற்றியோ, சுடுபட்ட இடம்பற்றியோ அவரால் நிரூபிக்க முடியவில்லை. எல்பிட்டியில் அக்காலத்தில் வசித்த மேஜர் மொல்லிகொடவும், தமக்குத் தெரிந்த வகையில் அப்பிரதேசத்தில் கலவரங்கள் இருக்கவில்லையென்று கூறினர். மேலும் அம்மூவரும் ஆறாந் திகதி காலிக்குச் சென்றார்களென்றாலும் அவர்களுடைய குடும்பத்தவர்களை அழைத்துச் செல்லவோ, வீட்டுச் சாமான்களை எடுத்துச் செல்லவோ எண்ணவில்லை. அந்தக் காலத்தில் பயங்கரவாதிகளுடைய கலவரம் நடைபெற்றிருந்தால் இவ்வாறு அவர்கள் நடந்துகொண்டிருப்பார்களாவென்று எவரும் ஆராய்ந்து பார்க்க விரும்பலாம்.

## யாருடைய பயங்கர வாதம்

காலி பொலீஸிலிருந்து வந்த பொலீஸ் கோஸ்டியுடன் ஏப்ரல் 6ந் திகதி காலிக்குச்சென்ற எல்பிட்டி பொலீஸ் நிலைய அதிபரும் மற்றும் அதிகாரிகளும் அன்றைய தினமே எல்பிட்டிக்குத் திரும்பிவிட எதிர்பார்த்தனரெனினும், காலி பொலீஸ் அதிகாரி நவரெத்தினம் அவர்களுடைய ஆலோசனையின் படி அவர்கள் திரும்பிவிடவில்லை. அவர்கள் அதன்பின் இருதினங்கள் கழிந்ததும், பொலீஸ் படையினரும் அதிகாரிகளும் அடங்கிய சுமார் 300 பேர்களுடன் மீண்டும் எல்பிட்டிக்குத் திரும்பினார்கள். எல்பிட்டி பிரதேசத்தில் கலவரங்கள் நடைபெறவில்லையென்றால் அவர்கள் 6ந் திகதி அந்தப் பொலீஸ் நிலையத்தைக் கைவிட்டுச் சென்றதேன்? அரசின் யாரோ ஒருவருடைய உத்தரவுப்படி ஜனதா விமுக்தி பெரமுனையின் உறுப்பினர்களைச் சர்வ நாசப்படுத்தச் செய்யப்பட்ட சூழ்ச்சியா இது?

## கட்டுக்கதை

இந்த சார்ஜன்டைக் கொலை செய்ததாகக் கூறப்படும் வாட்டின் வைத்திய அதிகாரியோ தாதிமாரோ, நோயாளரோ, இச்சம்பவம் நடந்ததைக் கண்டதாகக் கூறக்கூடிய சாட்சிகள் எவரையும் அரசு ஆஜர்படுத்தவில்லை. மேலும் சார்ஜன்ட் மடுத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார் என்பதை நிரூபிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்திலும் கட்டில் தலைத்துண்டிலும் (BHT) யாரோ திருத்தங்கள் செய்திருப்பதும் தெரிந்தது. அதாவது அனுமதிக்கப்பட்ட தினம், மருத்துவ மனையில் சிகிச்சை பெற்ற தினங்கள், மரணமடைந்த தினம் ஆகிய விபரங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகத் தெரிந்தது.

இப் பொலீஸ் சார்ஜன்ட் மரணமடைந்த பின்னர் எவ்வித மரண விசாரணை நடத்துவதற்கோ, குறைந்த பட்சம் பிரேதத்தைப் பார்வையிடுவதற்கோ மருத்துவ மனைக்குப் பொறுப்பாக விருந்த வைத்திய அதிகாரியோ வேறுவைத்திய அதிகாரிகளோ செல்லவில்லை. பிரேதத்தை எடுத்துச் செல்வதற்காக வந்த பொலீஸ் பரிசோதகர் ஜினசேன நேரடியாகப் பிரேதச் சாலைக்குச் சென்று பிரேதத்தைக் கொண்டு சென்றதைத் தவிர மரணம் நடந்தது எவ்வாறு? எவரால்? எங்கே? ஆகிய கேள்விகளுக்குப் பதில் அளிக்கப் பிரயத்தனம் செய்யவில்லை. குறைந்த பட்சம் மருத்துவமனைக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரியைக்கூடச் சந்திப்பதற்கு அவர் அச்சந்தர்ப்பத்தில் செல்லாததேன்? எதிரிகள் சார்பில் கூறியபடி சார்ஜன்ட் மரணமடைந்தது ஆரம்பத்தில் மருத்துவமனையில் அனுமதிப்பதற்குக் காரணமாகவிருந்த காயங்களால் தான் என்று அவர் எண்ணியதினாலேயோ?

இந்த வழக்கில் இன்னொரு விடயமும் நடந்தது. அதாவது முன்னாள் உயர் நீதிமன்றத்தின் சிரேஸ்ட நீதிபதியும், முதலாவது குற்றவியல் நீதி ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ. ஸி. அலஸ் அவர்கள் இவ்வழக்கு விசாரணைக்குமுன் எழுதி வெளியிட்ட ''1971 கிளர்ச்சி'' என்ற நூலில் உள்ள எல்பிட்டி சம்பவங்களும் விசேடமாக சார்ஜன்ட் மென்டிஸ் மரணம் சம்பந்தமாகவும் குறிப்பிடப்பட்டிருப்பவைகள் தவறானவைகள் என்று வழக்குத் தொடுநருடைய சாட்சியங்களின்படி அம்பலமாகியது. இவ்வழக்கில் எதிரிகள் சார்பில் ஆஜராகிய தோழர் பாலா தம்பு இப்போது இது சம்பந்தமாகப் பிரதம நீதியரசருக்குப் புகார் செய்திருக்கின்றார்.

தோழர் பாலா தம்பு இவ்வழக்கில் இரு எதிரிகள் சார்பிலும் ஆஜரானதுடன், முதலாவது எதிரி எட்மன்ட் சார்பில் சட்டத்தரணி ராஜா டெப் அவர்களும் ஆஜரானர்

# பால்சபை ஊழியரின் கோரிக்கைகள் பலிதம்

**பால்சபையிலுள்ள தொழிற்சங்கங்கள் கூட்டாகத் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குமெனப் பயமுறுத்தல் செய்ததும் அச்சங்கங்களினால் நிர்வாகத்திற்குக் கூட்டாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மூன்று கோரிக்கைகளுள் இரண்டை வழங்குவதற்கு நிர்வாகம் இணங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.**

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், அகில இலங்கை தேசிய பால்சபை தொழிற்சங்கம் (ல.ச.ச.க.) மற்றும் ஸ்ரீலங்கா தேசிய பால்சபை தொழிற் சங்கம் (ஸ்ரீ.ல.சு.க.) ஆகியனவற்றைக் கொண்டதாக இத் தொழிற்சங்கக் கூட்டு முன்னணி அமைந்திருந்தது.

வெலிசறை பால் மா திட்டத்தில் 6 வருட காலமாகத் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்து மீண்டும் வேலை வழங்கப்பட்ட இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பதினொரு அங்கத்தவர்களுக்கு சபையின் கொள்கைத் தீர்மானத்திற்கிணங்க 6 வருட காலத்திற்குரிய நிலுவை வேதனங்களை வழங்குவதற்கு சபை மறுத்ததே கூட்டுத் தொழிற் சங்க நடவடிக்கைக்கான பயமுறுத்தல் செய்யப்பட்டதற்கு உடனடிக் காரணமாகும்,

நடவடிக்கையில் இறங்குவதென்று பயமுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து சபையின் முன்னைய தீர்மானம் மாற்றப்பட்டு சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களுக்கு ஏறத்தாழ ரூபா 155,000/- கணக்கிடத்தக்க தொகையாக [illegible] வேதனங்களையும் வழங்குவதற்கு நிர்வாகம் தீர்மானித்தது. நேரடியாக ஆட்களை வேலைக்கு நியமனம் செய்வதை நிறுத்தி பால் சபை சேவையின் சகல காலி ஸ்தானங்களும் பால்சபை ஊழியர்களிலிருந்து நிரப்பப்படுவதற்கும் சபை இணங்கியது.

கூட்டு நடவடிக்கைக்கான பயமுறுத்தல் செய்யப்பட்ட தினத்தன்று மாலையில் சங்கங்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையிலேயே இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மூன்றாவது முறையாகப் பால்சபைத் தொழிற்சங்கங்கள் கூட்டு நடவடிக்கை மூலம் பொதுக் கோரிக்கைகளை வென்றெடுத்தது குறிப்பிடத்தக்கதாகும். 1974 டிசம்பர் மாதத்திலேயே முதலாவது பெரிய கூட்டு நடவடிக்கை போனஸ் கோரிக்கைக்காக எடுக்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் பால் சபையின் சரித்திரத்திலேயே முதல் முறையாக போனஸ் வழங்கி வேலைநிறுத்தத்தை நிர்வாகம் தீர்த்துவைத்தது. இவ்வருடம் ஜுலை மாதத்தில் இரண்டாவது தடவையாக நடைபெற்ற கூட்டு நடவடிக்கை மூலம் பெற்ற முக்கிய நன்மைகள், கீழ் தரங்களிலுள்ள லிகிதர்களுக்கு தன்னியக்க பதவியுயர்வு, நேர அட்டவணையாளர்களுக்குத் தரமுயர்வு மற்றும் பால்சாலைகளில் விற்பனையாளர்களாகக் கடமையாற்றும் பெண்களுக்குப் பதவியுயர்வு என்பனவாகும்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திற்குப் பால்சபையில் 1968ம் ஆண்டு முதல் சரித்திரமுண்டு. நாரஹென்பிட்டி பால்சபை தலைமைக் காரியாலயத்தின் லிகிதர்களையும் மற்றும் அதனோடு இணைந்த தரங்களையும் சேர்ந்த போராளிகளான இலங்கை வர்த்தக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் ஒழுங்கற்ற நியமனங்கள் தொடர்பாக வரலாற்றுப் பிரசித்தி பெற்ற 175 நாட்கள் (ஆறு மாதங்கள்) வேலைநிறுத்தத்தை 1968ல் செய்து, இ.வ.ஊ.ச. பொது வேலைநிறுத்தம் செய்யப் பயமுறுத்திய பின் அதில் வெற்றி கண்டனர்.

தற்போது பால்சபையிலுள்ள இ.வ.ஊ.ச. அங்கத்தவரின் எண்ணிக்கை 800 ஆகும். அவர்கள் பலதரப்பட்ட தரங்களையும் சார்ந்த ஊழியர்கள் ஆவர். அவர்கள் ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் வெவ்வேறு கிளைகளாக நாரஹென்பிட்டி, வெலிசறை, பல்லகெல, அம்பெவெல மற்றும் பொலன்னறுவ ஆகிய இடங்களில் இருக்கின்றனர்.

பால்சபையின் தொழிலாளர் ஒற்றுமை, ஏனைய நிறுவனங்களில் அரசியல் கருத்துவேறுபாடுகளுக்காக ஐக்கியமின்றி இருக்கும் தொழிலாளர்களுக்கு நல்லதோர் உதாரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருங்காலப் போராட்டத்திற்காக தொழிலாள வர்க்கத்தின் அனுபவம்

**1947-ம் ஆண்டு காலகட்டத்துக்குப் பின்னர், அதாவது முப்பது ஆண்டு காலகட்டத்துக்குள் நடந்திராத விதத்தில் அரச ஊழியர்களுடைய பிரமாண்டமான வேலைநிறுத்தப் போராட்ட அலைகள், சென்ற டிசம்பர் மாத மத்தியிலிருந்து ஜனவரி மாத மத்திவரை தீவிரமாகக் கிளம்பி பரவின.**

ஒரு புறம் முதலாளித்துவ அரசின் அடக்கு முறை உபாயங்களினாலும், மறுபுறம் அந்தந்த தொழிலாளர் பிரிவுகளுக்குப் பரந்த தீர்க்கதரிசனமும் திடசங்கற்பமுமுள்ள வர்க்கத் தலைமையின் வழிகாட்டல் இல்லாததினாலும் அந்த அலைகள் தணிந்து போய்விட்டன. ஆயினும் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு உடனடியாக முகம் கொடுக்க வேண்டியேற்பட்டு விடுமோ என்ற எண்ணத்தினால், தொழிலாளர் வர்க்கத்தோடு தனக்கு எந்தவித போராட்டமும் இல்லை என்ற ஏமாற்று வார்த்தைகளை உளறிக் கொண்டும், அடக்கு முறை பயமுறுத்தல்களை அவிழ்த்துவிட்டுக் கொண்டும் அரசுக்கு ஓரளவு பின்வாங்க வேண்டியேற்பட்டது.

வேலை நிறுத்தம் செய்த ஊழியர்கள் கோரிய கடன்சபை வழங்க வேண்டிய 500 ரூபாய் கடனுக்குப் பதிலாக, 200 ரூபாய் முற்பணமும் 300 ரூபாய் கடன் பணமும் வழங்குவதற்கு வேலை நிறுத்த அலைகள் பரவ ஆரம்பித்தபோது அரசு உடன்பட்டது. அடக்கு முறைகளுக்கு மத்தியிலும் தமது வேலை நிறுத்தங்கள் பற்றிய யதார்த்தமான தகவல்களை தெரிந்து கொள்வதற்கு எதிராக ஈடுபடுத்திய பத்திரிகைத் தணிக்கைக்கு மத்தியிலும் தொழிலாளர் பிரிவுகள் ஒவ்வொன்ருக தீவிரமாகப் போராட்டத்தில் இறங்கின. தனது சக்தியாலும் செயலாலும் செய்வதை தவிர அரசியல் ரீதியில் முதலாளித்துவ கட்சிகளுக்கும் அந்தக் கட்சிகளுக்குச்சார்பாகவுள்ள கட்சிகளின் தலைமைகளுக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் தேவைகளை நிறைவேற்ற இயலாது என்பதையும் அவ்வாறு செய்வதை அவை விரும்பாது என்பதையும் இந்தப் போராட்டத்திலிருந்து தொழிலாளர் வர்க்கம் பொதுவாக புரிந்து கொண்டிருக்கும். இந்தப் போராட்டத்தில் கிடைத்த அனுபவத்தின்படி தொழிலாளர் வர்க்கம் இதைவிட ஒழுங்கமைவதில் பலமடைந்து வருங் காலப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்குமென்று எண்ணலாம்.

வேலை நிறுத்தம் செய்துவரும் தொழிலாளர்களுடைய தொழிற் சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல், அவசரகாலச் சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட அத்தியாவசிய சேவை உத்தரவுகள் மூலமும் ஏனைய பல்வேறு அடக்குமுறை மூலமும் வேலை நிறுத்தத்தை முறியடிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதைப் பொருட்படுத்தாது பல்லாயிரக்கணக்கான ரயில்வே ஊழியர்கள் தமது கோரிக்கைகளுக்காக மூன்று வார காலத்துக்கு மேலாக ஒன்றுபட்டு போராட்டத்தை நடத்தினர்கள். துறைமுக கமிஷன் சபை, அரசாங்க எழுது வினைஞர்கள் சேவைகளிலும் உள்ளூர் ஆட்சி சேவைகளிலும் ஈடுபட்டுள்ள பொது துறைகளிலுள்ள பல்வேறு சேவை ஊழியர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்கள். போக்குவரத்து அமைச்சுக்கும், ரயில் சேவை தொழிற்சங்கங்களின் ஐக்கிய முன்னணிக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக வேண்டும் என்ற பிரதான கோரிக்கை மீது இலங்கை போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த நான்கு தொழிற் சங்கங்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தன. இரத்தினபுரி போன்ற சில பிராந்தியங்களில் இ. போ. ச. வைச் சேர்ந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தொழிற்சங்க உறுப்பினர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். அரசுக்குள் இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிற் சங்கங்களுக்குக்கூட, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தமது தொழிலாளர் பிரிவுகள் சார்பாக நின்று அறிக்கைகள் வெளியிட நேர்ந்தது.

## பின்னடைந்த தலைமையின்கீழ் நடந்த போராட்டம்

இந்த வேலை நிறுத்த அலைகள் ரயில் சேவையிலிருந்து மற்ற சேவைகளுக்கும் பரவுவதற்கு முன்பதாகவே அதாவது டிசம்பர் 29ந் திகதி இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் உட்பட்ட தொழிற்சங்க இணைப்புக் கமிட்டி பிரதமருக்கு அனுப்பி வைத்த ஒரு கடிதத்தில் ''வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களின் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தைநடத்துவதை நிராகரித்துவிட்டு, வேலை நிறுத்தத்தில் ஈடுபடாது அரசுக்கு அரசியல் ஒத்துழைப்பு அளித்துவரும் தொழிற் சங்கத் தலைமையின் ஆதரவோடு வேலை நிறுத்தத்தை முறியடிக்கச்செய்கின்ற தங்களின் முயற்சிதான் சேவையின் தற்கால நெருக்கடிக்குக் காரணம்'' என்று குறிப்பிட்டிருந்தது. ''1972ம் ஆண்டிலே நடைபெற்ற வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தின் போது நடந்துகொண்டதைப்போல் கடந்த காலத்திலும் தற்காலத்திலும் ஏனைய சேவைகளை சேர்ந்த தொழிலாளர்களின் குறைபாடுகளும் இவ்வாறே தவிர்க்கப்பட்டு வருகின்றன என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் கடிதத்தில் இலங்கை வங்கி ஊழியர் சங்கம், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரச சேவை தொழில் நுட்ப உத்தியோகத்தர் தொழிற்சங்கசம்மேளனம், அஞ்சல் தந்தி தொலை தொடர்புச் சேவையாளர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகிய தொழிற் சங்கங்கள் கையெழுத்திட்டிருந்தன.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:

''வேலை நிறுத்தம் நடைபெறும் சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அனுபவித்துவரும் சங்கடங்களுக்கு வேலைநிறுத்தக்காரர்களைக் காரணம் காட்டுவதோ அல்லது அரசு தன்னிச்சையாக முடிவுசெய்த சில சலுகைகளை வழங்க முன்வருவதாக அறிவிப்பதோ, வேலை நிறுத்தம் செய்யாமல் இருக்கும் அரசு சார்பு தொழிற் சங்கங்கள் என்று அழைக்கப்படும் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியோ நடத்தாமலோ எடுக்கப்படும் நடவடிக்கை பொதுமக்களின் நன்மைக்காக இருக்க முடியாது என்று நாங்கள் எண்ணுகிறோம். வேலைநிறுத்தத்திற்கான அடிப்படை பொருளாதார நிர்வாகக் காரணங்களை மூடி மறைக்கும் கொள்கையின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையே இவை பிரதி பலித்துக்காட்டுகின்றன.

''பத்திரிகை செய்திகளின்படி போக்குவரத்து அமைச்சரை கடந்த டிசம்பர் 24ந் திகதி சந்திப்பதற்காக முயன்ற புகையிரத தொழிற்சங்கங்களின் ஐக்கிய முன்னணி ஏனைய தொழிற்சங்கங்களின் பூரண ஆதரவைப் பெற்றிருக்கிறது என்பது தெளிவு. அமைச்சர் தொழிற்சங்க ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகளை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தாராயின் அவர்களது கோரிக்கையை நல்ல முறையில் ஆராய்ந்து பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு முடிவை ஏற்படுத்திக்கொண்டிருக்க முடியும். இப்பொழுதும் கூட அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கினல் மாத்திரமே இந்த வேலை நிறுத்தத்தை முடிக்க ஏதுவாக இருக்கும். இந்த அடிப்படையில் ஜனநாயக முறையில் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்த வேலை நிறுத்தம் முடிவுறுவதற்கு வழி வகுக்குமாறு அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

''வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு உங்கள் அரசின் பணவீக்கக் கொள்கையே நேரடியான காரணமாக இருக்கிறது. என்பதும் வாழ்க்கைச் செலவுக்கேற்ற சம்பள உயர்வு வழங்க மறுப்பதும், அதற்கான நிவாரணம் வழங்க தவறியிருப்பதுமே தற்போதைய புகையிரத ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு காரணம் என நாங்கள் கூறிக்கொள்ள விரும்புகிறோம். கடன் வசதிகளை அதிகரிப்பது மூலம் தற்போதைய வேலை நிறுத்தத்தை தீர்க்க முயல்வது ஒரு தற்காலிக நடவடிக்கையாகவே இருக்க முடியும். எனவே பொதுத் துறை ஊழியர்கள்

6ம் பக்கம் பார்க்க

## மனித உரிமைகளைப்...

2ம் பக்கத் தொடர்ச்சி

அவதானித்தோம். அது இவ்வாறிருக்க ஹம்பாந்தோட்டையில் ஆங்கிலத்தில் ''ஹம்பாந்தோட்டை'' எனஎழுதப்பட்டிருந்தது அழிக்கப்பட்டுச் சிங்களத்தில் ''விமுக்தி நகரய'' (விடுதலை நகரம்) என எழுதப்பட்டிருந்தது. 1958ம் ஆண்டில் நடைபெற்ற சம்பவங்களுக்கு இது மிகவும் மாருன நிலையாகும். அப்போது மதவாச்சி வரைக்கும் சகல தமிழ் எழுத்துக்களுக்கும் தார் பூசப்பட்டிடிருந்தது. வவனியாவுக்கு அப்பால் சிங்கள எழுத்துக்களுக்கு அதேகதி நேர்ந்தது.

''ஜனதா விமுக்தி பெரமுனைக்கு தமது உண்மையான எதிரிகள் யார் என்பது தெரியும். தமிழ் பேசும் மக்களை அவர்கள் சுரண்டப்பட்ட ஓர் சிறுபான்மை இனமாகக் கருதினர்''.

இந்த அமைப்பின்கீழ் பெரும்பான்மையான சிங்களவர்களும், தமிழர்களும் துன்பப்படுகின்றனர். அவர்கள் சுரண்டப்படுவது சிங்களவர்களையும் தமிழர்களையும் கொண்ட பொது ஆளும் வர்க்கத்தினலேயாகும்.

''சிங்களவர்களாக இருந்தாலோ அல்லது தமிழர்களாக இருந்தாலோ மனித உரிமைகள் எங்காவது அடக்குமுறை செய்யப்பட்டாலும் அதை எதிர்த்துப் போராடுவதற்கு ஒன்றுசேர வேண்டும்.

தோழர் பாலாதம்பு உரையாற்றியபின் கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருந்த தீர்மானத்தை திரு. கே. ஜெயக்கொடி சமர்ப்பித்துவிட்டு, நவம்பர் 26ம் திகதி நடைபெற்ற பொது அடையாள வேலைநிறுத்தத்திலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஒதுங்கிவிட்டது பற்றி தோழர் பாலா குறிப்பிட்டதற்குப் பதிலளித்தார். வேலை நிறுத்தம் வெற்றியளிக்கவில்லையெனக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது.

''பேராதனையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்காக வருந்தும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும், வேறு தொழிற் சங்கங்களும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநட்டில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூடு பற்றியும், யாழ்நகர் செம்மணியில் வங்கி லிகிதர் சுடப்பட்டது பற்றியும், புத்தளத்தில் முஸ்லிம்கள் சுடப்பட்டது பற்றியும் எதிர்த்து ஒரு வார்த்தையாவது வெளியிடவில்லை. ஆதலால் தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களுக்கு நேர்ந்த ஆபத்துப் பற்றி சிரத்தை காட்டவில்லை.

இச்சந்தர்ப்பத்தில் தோழர் பாலாதம்பு குறுக்கிட்டுத் திரு. ஜெயக்கொடி கூறிய விபரத்தில் காணப்பட்ட தவறினைத் திருத்தினர். அவர் கூறியதாவது.

தமிழாராய்ச்சி மகாநாட்டுச் சம்பவத்திற்கு இ. வ. ஊ. சங்கத்தின் பொதுச்சபை கண்டனம் தெரிவித்ததென்ருர். கண்டனம் தெரிவித்தல் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடல் ஆகிய இரண்டு விடயங்களையும் பற்றி திரு. ஜெயக்கொடி அவர்களுக்கு தெளிவாக இல்லை. கண்டனம் தெரிவிப்பது தன்னிச்செயாகச் செய்யக் கூடியதோர் செயல் கூட்டு நடவடிக்கை என்பது சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசனை செய்தபின் கூட்டாக எடுக்கப்படும் தீர்மானத்தினல் விளைவது.''

''புத்தளத்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக கண்டனத்தையாவது தெரிவிப்பதற்கு சங்கத்திற்கு உண்மையான விபரங்கள் கிடைக்கவில்லை. ஏனெனில் செய்திப் பத்திரிகைகளில் இம்மாதிரியானசெய்திகள்இருட்டடிப்புச் செய்யப்பட்டிருந்தன. இதில் கவனிக்கத்தக்கது என்னவென்ருல் சம்பந்தப்பட்ட மக்கள் அல்லது சம்பவத்துடன் தொடர்புடைய ஸ்தாபனங்கள் உண்மையான விபரங்களை இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திற்கு அறிவிப்பது பயன்தரவல்லது என்று எண்ணவில்லை. என்பதாகும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் போராட்டத்திற்கு அரசியல் கைதிகளின் ஆதரவு

"முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சியின் பயங்கரத்தை சுட்டிக் காட்டிக் கொண்டும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பயங்கரத்தை மூடி மறைத்துக் கொண்டும் இந்நாட்டு முதலாளி வர்க்கத்தின் ஆட்சியை நன்கு பாதுகாப்பதற்கு ஒத்தாசை புரியாமல் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளினதும் பயங்கரத்தையும் பொதுமக்களுக்குப் பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தி கொடூரமிக்க முதலாளித்துவ அரச இயந்திரத்தின் அடக்குமுறைகளை வன்மையாகக் கண்டித்து அதற்கு எதிராகச் செயல்முறையில் எதிர்ப்பைக் காட்டுவதற்காக உண்மையான எல்லா இடதுசாரி சக்திகளும் ஒன்றுபட வேண்டியதற்கான காலம் உருவாகி வெகுகாலமாகி விட்டது", என்று கொழும்பு மெகசின் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதிகளால், 1976 நவம்பர் 12ந் திகதி பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த பொலீஸின் பயங்கரச் செயல்கள் பற்றி வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது.

ஒரு மானவன் உயிர்துறப்பதற்கும், வேறுபல மாணவர்கள் படுகாயமடைவதற்கும் காரணமாயமைந்த, பொலீஸின் பயங்கரவாதச் செயல்களான கண்ணீர்ப்புகைப் பிரயோகம், குண்டாந்தடித் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடுகளை வன்மையாக எதிர்த்துக் கண்டனம் தெரிவித்து மெகசின் சிறைச்சாலையிலும், போகம்பரை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள சிறைச்சாலைகளிலுமுள்ள அரசியல் கைதிகள் தமது எதிர்ப்புக் குரலை வெளியிட்டுள்ளனர்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஓர் முற்போக்குக் கட்சியென்று கூறிக்கொண்டு முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதிக்கு வெள்ளை பூசுவதற்கு மேலும் இடமளிக்கக் கூடாது" என்று கூறும் மெகசின் சிறைச்சாலை அரசியல் கைதிகள் வெளியிட்ட அறிக்கை" 1971 ஏப்ரல் சம்பவங்கள் தொடர்பாக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சகல நவீன போல்ஷவிக் கைதிகள்" என்ற பெயரால் வெளியிடப்பட்டுள்ளது. முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சி தொழிலாளர் மாணவர் இயங்கங்களை எவ்வாறு வேண்டுமென்று அடக்கி ஒடுக்கியதோ; அவ்வாறே முதலாளித்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வேண்டுமென்றே தொழிலாளர்-மாணவர் இயக்கங்களை அடக்கி ஒடுக்கி வருகிறது என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன் அவர்கள் தொடர்ந்து தமது கண்டனத்தை இவ்வாறு வெளியிட்டிருக்கிறார்கள்.

"இதுபோன்ற இருட்டுச் சிறைகளில் இருந்து கொண்டும், வேதனைமிக்க மனிதத் தன்மையற்ற சூழலில் இருந்து கொண்டும் நாங்கள் உறுதியுடன் இறுக மடக்கிய விரல்களுடன் கையை உயர்த்தி முதலாளித்துவ வர்க்கத்தின் பாஸிஸ நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்."

போகம்பரை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அத்தகைய அரசியல் கைதிகள் சிலரால் வெளியிடப்பட்டு எமக்கு அனுப்பப்பட்டுள்ள இன்னொரு அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது.

"இலங்கையில் நடந்த வர்க்கப் போராட்ட வரலாற்றில் முதலாளித்துவ அடக்குமுறைகளுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டத் தொடரின் புதிய போராட்டப் பாதையாக இதை நினைவுபடுத்தி நடந்துவரும் மாணவர்-தொழிலாளர் போராட்டங்களுக்கும் அதன்மூலம் பலமடைந்துவரும் தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் உழைக்கும் மக்களின் இயக்கங்களுக்கும் போகம்பரை சிறைச்சாலையிலுள்ள புரட்சிகர அரசியல் கைதிகளாகிய நாம் பெரிதும் கௌரவம் அளிக்கின்றோம்"

யாழ்ப்பாணச் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதிகள் வெளியிட்டு அனுப்பியுள்ள மற்றுமொரு அறிக்கையில், "தமது நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக, முதலாளித்துவவர்க்கம் மேற்கொண்ட சகல அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராகவும், கொடூரமான பொலீஸ், அடக்குமுறைகளுக்கு எதிராகவும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களும், ஊழியர்களும் நடத்திய-நடத்தி வரும் வீரமிக்க போராட்டங்களுக்கு... முழுமையான ஒத்துழைப்பையும், ஆசீர்வாதத்தையும் அளிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பேராதனை வளாகத்தில் நடைபெற்ற பொலீஸின் பயங்கரவாதச் செயல்களுக்கு எதிராகவும், மாணவர்கள் இயக்கத்துக்கு ஒத்துழைப்பு அளிப்பதற்காகவும் மெகசின் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதி

6ம் பக்கம் பார்க்க

சங்கப் பத்திரிகையின் வாசகர் வட்டத்திலிருந்து ஒருவர் சிங்களத்தில் எழுதிய நீண்ட கடிதமொன்றிலிருந்து "ஆரம்பய" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சில முக்கிய பகுதிகளின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது. இவ்விடயத்தைப் பற்றியோ அல்லது வேறு விடயங்கள் பற்றியோ வாசகர்கள் தெரிவிக்கும் கருத்துகளில் முக்கியமானவற்றை அடிக்கடி "ஆரம்பம்" பத்திரிகையில் பிரசுரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## வாசகர் கருத்து

"எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தொழிற்சங்கங்களில் பெரும் மாற்றமொன்றைச் செய்யப் போவதாகப் பிரமுகர் ஒருவர் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். இம்மாற்றமானது என்ன குறிக்கோளை முன்னிட்டுச் செய்யப்படவுள்ளது என்பது பாட்டாளி மக்களுக்குப் புரியாத புதிராக உள்ளது. இவ்விடயத்தில் சந்தேகம் உண்டாவது இயற்கையே. இதில் உழைப்பாளி மக்கள் சகலரும் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

"ஐக்கிய தேசியக்கட்சி எதிர்பார்க்கின்ற இந்த முதலாளித்துவ மாற்றம் ஏற்படுவதற்கு தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் இன்று நிலவும் பூசல்கள் சிறந்த சந்தர்ப்பத்தை அளிக்க ஏதுவாக அமையும் என்பது உண்மை. தொழிலாள வர்க்கத்தினிடையே கீழ்மட்டத்தில் ஒற்றுமை உருவாகினுல் அத்தகைய மாற்றம் நிகழ முடியாது என்பது மட்டுமன்றி அந்த ஆட்சியின் கீழும் உரிமைகளை வென்றெடுக்கச் சந்தர்ப்பமும் கிடைக்கும்.


"இதற்காக உழைப்பாளி மக்களுக்கு தேவையான அரசியல் தெளிவை அளிக்க வேண்டியது அவசியம். இந்நோக்கத்திற்காக அவசர நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதைச் செய்வதற்கு வேலை ஸ்தானங்களில் உள்ள ஸ்தாபனங்கள் மூலமாக சிறந்த பணியை இலகுவாகச் செய்ய முடியும்.

பத்திரிகைகள் மூலமும், கருத்துப்பரிமாறல்கள் மூலமும் இப்பணியை மிகவும் இலகுவாகச் செய்யலாம்.

"பாட்டாளி மக்கள் தமது ஒடுக்கப்பட்ட நிலையை உணரும்போது ஆட்சியாளர்மீதுள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக இன்றிருப்பதைவிட இன்னுமோர் கொடிய ஆட்சியைப் பற்றிக் கனவு காண்கின்றனர். தமது வர்க்கத்தை அடையாளம் கண்டு கொள்வதில் தமக்குள்ள இடையூறுகளால் இந்நிலைமை ஏற்படுகின்றது. இத்தகைய பிரிவுகள் சொற்பமாக இருந்தாலும் அவற்றினுல் விளையும் ஆபத்தோ அற்பமானதல்ல.

இவை அனைத்துக்கும் மூல காரணம் மேலே கூறியுள்ள அரசியல் அறிவு இல்லாமையேயாகும்.

செய்தித் தணிக்கை அகற்றப்பட்டாலும் முதலாளித்துவ வர்க்கமும் அவர்களுக்கு வாழ்பிடிபபோரும் நடத்தும் பத்திரிகைகள் சுயமான செய்தித் தணிக்கைக்கு ஆளாகியே வருகின்றன.



பத்திரிகைச் சுதந்திரம் படும்பாடு

# மதிப்பைத்தேட 33 கோடி மகாநாட்டுக்குச் செலவு

கூட்டுச்சேரா என்று கூறப்பட்ட நாடுகளின் மகாநாட்டை இலங்கையில் நடத்துவதற்காக இலங்கை செலவு செய்ய வேண்டியேற்பட்ட முழுத் தொகை முப்பத்துமூன்று கோடியே அறுபத்தாறு லட்சத்து பன்னீராயிரத்து முப்பத்து மூன்று ரூபா பதினுறு சதம் (ரூபா 33,66,12,33.16) என்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளிலிருந்து தெரியவருகின்றது.

மகாநாட்டின் அமர்வுகளுக்காகவும், மகாநாட்டை ஆடம்பரமாக நடத்தும் பொருட்டுச் செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்காகவும் செலவாகிய தொகை இருபத்தேழு கோடி ரூபாய்க்கு மேலாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. முப்படைகளுக்கும், பொலீஸ் படைக்கும் நவீன உபகரணங்கள் வழங்கல், கெப்பிட்டி பொல மாவத்தையில் உல்லாச மாடி மாளிகை நிர்மாணித்தல் மற்றும் இசைக் கருவிகள் கொள்வனவு போன்ற செலவுகள், அபிவிருத்தி வேலைகள் என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தன,

உல்லாச மோட்டார் வாகனங்களையும், மோட்டார் சைக்கிள்களையும் கொள்வனவு செய்ய மூன்றரைக் கோடி ரூபா வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

மகாநாட்டுக்காக வெளிநாடுகளிடமிருந்து பண்டங்களாகக் கிடைத்த உதவி ஐந்தரைக் கோடி ரூபா மதிப்பிடத்தக்கவை என்றும் அவைகள், றம், வைன், கியூபா சுருட்டுகள், பொலீஸ் குதிரைகள், கொடிகள், இசைக்கருவிகள், ரேடியோக்கள், பழவகைகள் மற்றும் சூப் போன்ற பண்டங்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (1976 நவம்பர் 26ந் திகதிய ஹென்சார்ட் அறிக்கையைப் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரமற்ற நியமனம்

நாவலப்பிட்டி ஓயா, உடரடெல்ல அரச பெருந் தோட்டத்தைச் சேர்ந்த இலங்கை தோட்டச் சேவையாளர் சங்கத்தின் உறுப்பினரான தோழர் எம். எஸ். ஏ. எச். முகைதீன் என்பவரை ஸ்ரீ லங்கா அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம் சேவை நீக்கம் செய்துள்ளது.

அவருக்கு வழங்கப்பட்ட சேவை நீக்கக் கடிதத்தில், அவரது "நிரந்தரமற்ற நியமனம்" 1976-12-31ந் திகதிக்குப் பின் அவசியமில்லையென்று கூறப்பட்டுள்ளது.

இவர் உடரடெல்ல தோட்டத்தில் காணிச் சீர்திருத்த ஆணைச் சபையால் இத்தோட்டம் 1975 அக்டோபர் 15ந் திகதியளவில் பொறுப்பேற்கப்படும் வரை 12 வருட காலம் சேவை செய்துள்ளார். மேற்படி தோட்டம் காணிச் சீர்திருத்த ஆணைச்சபையால் பொறுப்பேற்கப்பட்டபோது முகைதீன் உட்பட அங்கு கடமையாற்றிய ஏனைய சேவையாளர் அனைவரும் தமது சேவை நிபந்தனைகளில் மாற்றம் செய்யப்படமாட்டாது என்று காணி விவசாய அமைச்சரும், தோட்டத் தொழில் அமைச்சரும் அளித்த வாக்குறுதியின் பேரில் வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டனர். பின்னர் இத்தோட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு 1976-3-15ந் திகதி தொடக்கம் அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அன்றுமுதல் தோழர் முகைதீனும், சக சேவையாளரும் "நிரந்தரமற்ற ஊழியர்கள்" எனக் கருதப்பட்டனர்.

முகைதீன் அவர்கள் தோட்டத் துரையின் நடவடிக்கைகள் பற்றி கணக்காய்வாளர் நாயகத்திற்கு விலாசமிட்டு பிரதம மந்திரிக்கும், தோட்ட தொழில் அமைச்சருக்கும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கும் பிரதிகளுடன் கடிதமொன்றை அனுப்பியதன்பின்னரே சேவை நீக்கம் செய்யப்பட்டார்.

இருப்பினும் வருடக் கணக்காக சேவையாற்றிய தொழிலாளர்கள் அரசினுல் பொறுப்பேற்கப்பட்டபின் "நிரந்தர மற்ற ஊழியர்" என்ற அடிப்படையில் நினைத்தவுடன் சீட்டுக்கிழிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் நிலை தொழிலாளர்களுக்கு அரசு இழைத்த பெரும் அநீதியாகும்.

அரசாங்கம் பொறுப்பேற்ற தோட்டங்களில் கடமையாற்றிய சகல ஊழியர்களினதும் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைக்கக்கூடிய இந்த நிலை பற்றித் தோட்டச் சேவையாளர் சங்கம் தொழிற் சங்க இணைப்புக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம்முகைதீன் விடயத்தில் தோட்டச் சேவையாளர்கள் எடுத்துள்ள நிலையை ஆதரிப்பதென தீர்மானித்துள்ளது.

## கற்றந்தொல........

(1ம் பக்கம் தொடர்ச்சி)

உரிமையுண்டு. நாங்கள் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் சேர்ந்தபோது எம்மை யாரும் தவருக வழி நடத்தவில்லை. ஆனுல் நாம் ஜனவாசவில் சேர்த்துக்கொள்ளப்பட்டபோதே தவருக வழி நடத்தப்பட்டோம். இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் பிற் போக்குச் சங்கமல்ல எனத் திட்ட வட்டமாகக் கூறுகின்ருேம். இவ்விடயத்தில் தாங்கள் தெரிவித்துள்ள கருத்தை நிராகரிக்கின்ருேம்."

சில நாட்களின் பின் முன்னர் புரிந்த குற்றத்திற்காகப் பல மாதங்களுக்கு [illegible] தண்டனை வழங்கி முடிந்த [illegible] மொரு ஊழியரும் தற்[illegible] வேலை நீக்கம் செய்யப்[illegible]டார்.

இவ்விடயங்கள் தொடர்பாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்குச் சங்கம் சட்ட ஆலோசனை செய்து கொண்டிருந்தது.

இதற்கிடையே ஆறு தொழிலாளர்களும் தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த காலத்திற்குரிய நிலுவை வேதனமின்றி மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

## மூளாய் வைத்தியசாலை விசாரணைக்குப்பின் தோழர் கதிரித்தம்பிக்கு மீண்டும் வேலை

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையிலுள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் செயலாளர் தோழர் க. கதிரித்தம்பிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு யாழ்மாவட்ட அரசாங்க அதிபரான கூட்டுறவு அதிகாரியால் நியமிக்கப்பட்ட விசாரணை உத்தியோகத்தர் அறிக்கை சமர்ப்பித்த பின்னர் 77-1-5ந் திகதி முதல் அவருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

இவரது தற்காலிக வேலை நீக்கத்தைத் தொடர்ந்து 1976 ஏப்ரல் 26ந் திகதி முதல் 107 நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றதன் விளைவாக அக்காலத்தில் பதவியிலிருந்த மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் அதிகார சபை கூட்டுறவு அதிகாரியால் 1976 ஆகஸ்ட் 6ந் திகதி அகற்றப்பட்டு புதியதொரு சபை அமைக்கப்பட்டது வாசகர் அனைவரும் அறிந்ததே.

அங்கத்தவர்கள் ஆகஸ்ட் 11ந் திகதி வேலைக்குத் திரும்பியஅதே தினத்தில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணை 30-9-76ல் முடிவடைந்தது.

தோழர் கதிரித்தம்பிமீது இரண்டு குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன. முதலில் நான்கு குற்றச் சாட்டுகளும் இரண்டாவதில் எல்லாமாக ஆறு குற்றச் சாட்டுகளும் அடங்கியிருந்தன.

விசாரணையின் போது தோழர் கதிரித்தம்பி மீதான குற்றச்சாட்டுகள் சிருஸ்டிக்கப்பட்டவையென்றும் பொய்யானவையென்றும் நிர்வாகத்தினரின் சங்க விரோத நடவடிக்கைக்காகச் செய்யப்பட்டதென்றும் தெரியவந்தது.

விசாரணை உத்தியோகத்தரின் முடிவின் பிரகாரமும் கதிரித்தம்பி மீது கொண்டுவரப்பட்ட எந்தக் குற்றச் சாட்டும் முழுமையாக நிருபிக்கப்படவில்லை. 'இருப்பினும் அவர் தனது அறிக்கையில் ஒழுங்கு மீறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு கதிரித்தம்பியை ஒழுங்கு மீறப்பட்டதற்கான குறைந்த குற்றத்திற்குக் குற்றவாளியாகக் கண்டுள்ளார்.

இதனுல் நிர்வாகம் கதிரித்தம்பிக்குக் கடும் எச்சரிக்கை செய்து அவருக்கு வழங்க வேண்டிய தற்காலிக வேலைநீக்ககாலத்திற்குரிய சம்பளத்தில் 20% தொகையை வழங்காது வைத்துக்கொண்டது.

## வருங்காலப் போரட்டத்திற்காக....

4ம் பக்கத் தொடர்ச்சி

எல்லோருக்கும் திருப்திகரமானதோர் அடிப்படையில் வாழ்க்கைச் செலவுப்படி வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என நாங்கள் உங்கள் அரசிடம் கோரிக்கொள்கிருேம்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் புகையிரத சேவை தொழிற் சங்கங்களின் கூட்டணித் தலைவர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டது. இதற்கு எவ்வித பதிலும் சங்கத்துக்கோ இணைப்புக் கமிட்டிக்கோ வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததொழிற்சங்கங்களிடமிருந்து கிடைக்காத போதிலும், இணைப்புக்கமிட்டி மீண்டும் கூடி ஜனவரி 6ந் திகதி பிரதமருக்கு அனுப்பிய ஒரு கடிதத்தில், புகையிரத சேவையிலும், மற்றும் அரசாங்க சேவையிலும் நடைபெற்று வரும் ஊழியர்களுடைய வேலை நிறுத்தத்தை முறியடிக்கச் செய்யப்படும் முயற்சிகளுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடனே வேலை நிறுத்தத்துக்கு ஒரு தீர்வுகாணும்படியும் அவசரகால நிலைமையை அகற்றும்படியும் மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச்சபை ஜனவரி 11ந் திகதி கூடியது. தமது பொருளாதாரச் சங்கடங்களை முன்வைத்து மாபெரும் பரந்த போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் வர்க்கப் பிரிவுகளிலிருந்து நாம் ஒதுங்கியிருந்து சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று அக்கூட்டத்திற்குப் பின்னர் சங்க உறுப்பினர்களுக்குப் பிரசுரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டது. அப்பிரசுரத்தில் மேலும் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"லங்கா சமசமாஜக்கட்சி அரசிலிருந்துவெளியேற்றப்பட்டதோடு அரச துறையில் வர்க்கப் போராட்டத்துக்குப் போடப்பட்டிருந்த பெரும் தடை தளர ஆரம்பித்துக் கொண்டிருந்தது. அதே சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தொழிற்சங்கங்களின் தலைமைக்கும் புகையிரத சேவை வேலை நிறுத்த அலைகளைத் தடுத்து நிறுத்த முடியாத நிலைமையும் ஏற்பட்டது, அத்தியாவசிய சேவைகள் கட்டளைச் சட்டத்தை பாவித்து இந்த வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர அரசுக்கு இயலாமல் போய் விட்டது. கொழும்பு மாவட்டத்தில் பகிரங்கப் பொதுக் கூட்டங்களுக்கு தடை விதித்தும் செய்தித் தணிக்கை செய்தும் வேலை நிறுத்தம் சம்பந்தப்பட்ட உண்மைகளை பொது மக்கள் மத்தியிலும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் மத்தியிலும் மூடி மறைத்து வேலை நிறுத்தத்தை முறியடிக்கவும் இப்போது அரசாங்கம் முயல்கிறது.

"வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் மீது எமது சங்கம் முழு அனுதாபம் கொண்டுள்ளதுடன் அவர்கள் விடயமாக அரசாங்கத்தினுல் கையாளப்படும் பிற்போக்கு வழிகளை முற்ருக எதிர்க்கிறது. வேறு சங்கங்களின் தலைமை பீடத்தின்கீழ் வேலை நிறுத்தம் செய்யும் அல்லது செய்யவுள்ள வேறு தொழிலாளர்களுடன் அனுதாப வேலை நிறுத்தம் செய்வதற்கு எந்த ஒரு வேலைத் தளத்தில் உள்ள எந்த ஒரு கிளைக்கும் அந்த வேலைத்தளத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுடன் ஒற்றுமையைப் பேணுவதற்காக வேலைநிறுத்தம் செய்வது உகந்ததெனை எமது கிளை கருதுமானுல், மட்டுமே அம்மாதிரியான ஒரு வேலை நிறுத்தத்தைசெய்யலாமென அங்கீகாரமளிக்கப் பொதுச் சபை தீர்மானித்துள்ளது.

மேலும் அவசரகால நிலைமையை ஒழிக்கும்படியும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படியும் கோரி பொது அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை செய்யவேண்டும் என்று தொழிற்சங்க இணைப்புக்கமிட்டியில் ஒரு தீர்மானத்தை பிரேரிக்க வேண்டுமென்று பொதுச்சபை ஜனவரி 11ந் திகதி பிற்பகல் தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்தை அமுல் நடத்துவதற்காக ஜனவரி 13ந் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. தொழிலாளர் வர்க்கத்தின் நலன் கருதியும், தொழிலாளர் வர்க்க ஒற்றுமையைச் செயலில் விரிவுபடுத்துவதற்காகவும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் சகல கிளைகளும் தயாராக இருக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது.

ஆயினும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைமையிலுள்ள இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தால் அழைக்கப்பட்ட ஒற்றுமை தெரிவிக்கும் வேலை நிறுத்தத்திற்கு தனியார் துறையிலும் கூட்டுத்தாபன துறையிலும் சொற்ப ஆதரவே கிடைத்தது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிற் சங்க சம்மேளனம் போராட்டத்துக்கு ஆதரவு அளித்து ஒரு பிரசுரத்தை வெளியிட்டிருந்தபோதிலும் அந்தத் துறைகளிலுள்ள தமது அங்கத்தினர்களை போராட்டத்துக்கு அழைக்கவில்லை. ஏற்கனவே சமசமாஜக்கட்சியின் இ-போ-ச. தொழிற் சங்கம் விடுத்த வேலை நிறுத்த அழைப்புக்கும் முழு ஒத்துழைப்பு ஊழியர்களிடமிருந்து கிடைக்கவில்லை. இ-போ-சவில் போராட்டத்தில் குதித்தவர்களில் சிலர் இரண்டொரு தினங்களில் மீண்டும் வேலைக்குத் திரும்பினுர்கள் என்ற செய்தி பரவியது.

இந்நாட்டின் சரித்திரத்தில் முதல் [illegible] கள் ஒரு புகையிரதத்தைக்கூட செலுத்த முடியாமலிருந்தபோதிலும், இந்தநிலைமையின் கீழ், புகையிரத முன்னணியில் போராடிய ஊழியர்களுடைய மனத்திடம் படிப்படியாக குறைந்து வந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆரம்பத்தில் புகையிரத சாரதிகள் சிலருடைய உதவியோடும், புகையிரதத்துக்கு மேலாக ஆகாயத்தில் பறந்த ஹெலிகொப்டரின் துணைகொண்டும் சில புகையிரதங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓடச்செய்ய அரசுக்கு இயலுமானதாக இருந்தது. பின்னர் பிரயாணிகள் இல்லாமல் படைவீரர்களை மாத்திரம் ஏற்றிக்கொண்டு இரண்டொரு புகையிரதங்கள் சேவைக்கு விடப்பட்டன. அதற்குப்பின்னர் சில பிரயாணிகளைக்கொண்ட புகையிரதங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சேவையில் ஈடுபடுத்த அரசுக்கு முடிந்தது என்பது தெரிந்தது.

ஜனவரி 17ந் திகதி ஆகிய போது சகல பிரிவுகளிலுமுள்ள ஊழியர்கள் உத்தியோகப் பூர்வமாகவே வேலை நிறுத்தத்தை முடித்துக்கொண்டு வேலைக்குத் திரும்பிச் சென்றுர்கள்.

ஆரம்பத்தில் சங்கத் தலைமையில்லாமலேயே இரத்மலானை ஊழியர்கள் சிலரால் ஆரம்பிக்கப்பட்டதும், பின்னர் முழு புகையிரத சேவைக்கும், அரசு துறைக்கும் பரவிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் போராட்டமானது, பொதுவான தொழிலாளர் வர்க்க ஐக்கியமும் போராட்ட சுபாவமுள்ள சுயேச்சையான தொழிலாளர் வர்க்கத் தலைமையின் வழிகாட்டலும் இல்லாததினுல் இந்நிலையில் முடிவடைந்தது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தினுல் கொழும்பு-13 விவேகானந்தர் மேட்டில் அமைந்துள்ள சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org